**செ. கு. எண்:80** **நாள்:21.03.2013**

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 21.3.2013

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி உள்வட்டம், பனஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. சொக்கள்ளிமல்லன் என்பவரின் மகன் மல்லு 15.3.2013 அன்று தாளவாடி பகுதி அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகம், தடாகம் ஒதுக்கு காடு அருகே 16.3.2013 அன்று சேலம் மாவட்டம், அத்திப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. துரைராஜ் என்பவரின் மகன் வேடியப்பன் காட்டு யானையால் தாக்கப்பட்டு, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 17.3.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த மல்லு மற்றும் வேடியப்பன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மல்லு மற்றும் வேடியப்பன் ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**